# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EP.No.145/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 03 (PW- 03) |
| பெயர் | :- | சின்னதம்பி |
| தேதி | :- | 16-09-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

என் தகப்பனார் பெயர் சின்னய்யாபிள்ளை. சின்னய்யாபிள்ளையின் தம்பி ராமசாமிபிள்ளை. ராமசாமியின் குடும்பமும் நாங்களும் ஒன்றாக வசிக்கிறோம் என்று காட்ட நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்ய -வில்லை என்றால் சரிதான்.

சின்னய்யாவிற்கும் இராமசாமிக்கும் பாகப்பிரிவினை நடந்துவிட்டது. 1984-ஆம் ஆண்டு நடந்தது. சின்னய்யா பாகப்பிரிவினை பத்திரத்தில் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். சின்னய்யாவின் சொத்துக்களை பொறுத்து பின்னிட்டு பாகப்பிரிவினை ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை. சின்னய்யாவிற்கு 02 மகன்கள், 02 மகள்கள். நான் ஒரு மகன், தனபால் என்பவர் மற்றொரு மகன். சரசு என்பவரும் ரத்தினம் என்பவரும் மகள்கள்.

முருகேசன் மனைவி சாந்தி என்றால் சரிதான். முருகேசன் வண்டி பட்டறை தொழில் செய்தார் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகள்

செய்தார் என்று குறிப்பாக சொல்லமுடியாது. சேலம், நெத்திமேடு முனியப்பன் கோவில் தெருவில் பட்டறை வைத்திருந்தார். செந்தில் அவருடைய தகப்பனார் பெயரில் இருந்த சொத்து வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளார்.

செந்திலின் தகப்பனார் முருகேசன், முருகேசனின் தகப்பனார் இராமசாமிபிள்ளை, இராமசாமிபிள்ளையின் மற்றொரு மகன் இராஜேந்திரன் ஆகியோர் 1982-ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் சான்றொப்பம் இடவில்லை. அந்த பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு நேரில் தெரியாது.

ஜெயபிரகாஷ் என்பவர் யார் என்றால் இராமசாமிபிள்ளையின் மகன். ஜெயபிரகாஷின் மனைவி பெயர் ஈஸ்வரி என்றால் சரிதான். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் சம்மந்தப்பட்டுள்ளன என்று தனிதனியாக எனக்கு தெரியாது. முருகேசனுக்கு 1250 ச.அடி இடம், 20,000/- உருபாய் பணம், 09 பவுன் நகை பாகமாக கொடுக்கப்பட்டது. அந்த விவரம் பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ளதா என்றால் உள்ளது. பாகப்பிரிவினை பத்திரத்தை தவிர முருகேசனுக்கு கொடுக்கப்பட்ட சம்மந்தமாக வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

முருகேசனுக்கு எவ்வளவு பணம், எவ்வளவு நகை, எவ்வளவு பாத்திரங்கள் கொடுக்கப்பட்டன என்று முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முருகேசன் எந்த ஆண்டு வங்கியில் கடன் வாங்கினார் என்று குறிப்பாக எனக்கு தெரியாது. எவ்வளவு உருபாய் கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

வழக்குச் சொத்தில் 06 வீடுகள் கட்டியிருந்து முருகேசன் நகராட்சியில் அனுமதி வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. எவ்வளவு உரூபாயில் கட்டினார் என்று எனக்கு தெரியாது. யார் யாருக்கு வாடகைக்கு விட்டார் என்றும் எவ்வளவு வாடகை என்றும் நான் முதல்விசாரணையில் சொல்ல -வில்லை என்றால் சரிதான். மொத்தம் எவ்வளவு வருமானம் வந்தது என்றும் சொல்லவில்லை. வங்கியில் வாங்கிய கடனை எவ்வளவு கொடுத்து அடைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

ஜெயபிரகாஷின் மனைவி ஈஸ்வரிக்கு என்ன பாகம் கொடுக்கப் -பட்டது என்றால் 400 சதுர அடி இடம். ஈஸ்வரியிடம் இருந்து யார் கிரையம் வாங்கியது என்றால் முருகேசன். எந்த தேதியில் வாங்கினார் என்று எனக்கு தெரியவில்லை.

பெரியசாமி என்பவருக்கும் தியாகராஜன் என்பவருக்கும் முருகேசன் எந்த சொத்துக்களை விற்றார் எப்போது விற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. முருகேசனின் மகனும் மகள்களும் பொது குடும்பமாக வசித்து- வருகின்றனர் என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசனுக்கும் சாந்திக்கும் தனிப்பட்ட வருவாய் இல்லை என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சாந்தி பெயரில் தனியாக கிரயப்பத்திரம் எதுவும் இல்லை.

செல்வி என்ற யாரையும் எனக்கு தெரியாது. முருகேசனும் சாந்தியும் வழக்கு 02, 03-ஆம் இனச் சொத்துக்களை செல்வியிடம் விற்க 01.09.2006-ஆம் தேதியன்று ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக நடந்த வழக்கு நடவடிக்கைகள் குறித்து எனக்கு தெரியாது.

நான் வாதிகளுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.